103

பதிவு எண் —M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—4 திருதலம், மாம்பாக்கம் ; கர, மார்கழி ; 28—12—51. தளிர்—13

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

இரு மருந்து

நீண்ட நாள் உயிர் வாழ்வதற்குக் காரணமான மழையமிழ்தம், உயிர்களுக்கு உணவு என்றும் உண்ணீர் என்றும் இருவகையாய்ப் பயன்படுகின்றது. இவை இருவகையும், 'இரு மருந்து' என்றும் வழங்கப் பெறும்.

வலிமைக்குரிய கருக்கள் ஒருங்கு திரண்ட பொருள், மருந்து; இறவாமைக்குரிய அத்தகைய மருந்தே 'அமிழ்தம்' என்பது. ஆயினும், அமிழ்தம் என்னும்போது மக்களுக்கு உண்டாகும் மகிழ்ச்சி, 'மருந்து' என்னும்போது உண்டாவதில்லை. காரணம், வலுப் பொருள்களைச் செயற்கையாகத் திரட்டும்போது சுவை வேறுபடுவதனாலேதான். இயற்கையான அமிழ்தப் பொருள்களுக்கு வழங்கிய 'மருந்து' என்னும் பெயர், செயற்கைத் திரட்சிக்கு வழங்க நேர்ந்தபின், மகிழ்ச்சியும் மாறிவிட்டது.

உண்மையில், இயற்கையில் உண்டாகும் பல்வகை உணவுப் பொருள்களும், நன்னீர் வகைகளுமே 'அமிழ்தம்' அல்லது 'மருந்து' என்னும் பெயர்க்கு ஏற்றவை; சிறந்த நீண்ட உயிர்வாழ்க்கைக்குப் பொருந்தியவை. சிற்றுயிர்களெல்லாம் இத்தகைய இயற்கைப் பொருள்களையே உட்கொண்டு உயிர்வாழ்கின்றன.

மழையமிழ்தம் இவ் விரு மருந்தாய்ப் பிரிந்து நின்று உலகத்தைத் தாய்போலக் காத்து வருகின்றது. அதன் திறத்தில் மக்கள் கருத்தாகவும் நன்றியறிதலாகவும் இருக்கவேண்டும்; இருப்பது எப்படி? அதற்குரிய திருவருள் பெருகும்படி, காவு இல்லாத நல்லொழுக்கங்களுடன் விளங்கவேண்டும். நல்லவர் பொருட்டு மழை பெய்தல் இயல்பு!

துப்பார்க்குத் துப்பாய
துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.

துப்பார்க்கு—பசி தணிக்க உண்பார்க்கு, துப்பாய—வலிமையாகிய, துப்பு ஆக்கி—உணவுகளை உண்டாக்கி, துப்பார்க்கு—அவற்றை உண்பார்க்கு, துப்பு ஆயதும்—நீர்வேட்கை தணிக்க உண்ணீராய் உதவியதும், மழை — மழைநீரே.

உணவும் நீருமென உண்பொருள் இருவகை யாதலின், அவற்றை உட்கொள்ளும் இரு வேறியல்புந் தோன்ற, உண்பாரையும் இருவகையாக்கித் 'துப்பார்க்கு' என இருமுறை கூறினார்.

பசிதணிக்கும் உணவுப் பொருள்கள் நீர் வேட்கை தணிக்கும் உண்ணீரைவிட வலியன வாதலால், அவை 'துப்பாய துப்பு' எனப்பட்டன.

மக்களை நினைத்து உயர்திணையிற் கூறினரேனும், விலங்கு முதலிய அஃறிணைக்கும் இது கொள்ளப்படும்.

எல்லாம் இறந்த காலத்தால் வந்தன, மழைக்கு ஏதுவான திருவருளின் திறத்து நன்றி பாராட்டுதற்கு!

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

4-ம் ஆண்டுக் கையொப்பம்
(5-10-51 முதல்)

உள் நாடு	ரூ.	4 0 0
வெளி நாடு	ரூ.	6 0 0
தனித் தாள்		0 1 0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

கிளை	கர, மார்கழி,	தளிர்
4	28-12-51 வெள்ளி	13

அறிவியக்கங்களின் முதற் கடமை

சென்னையில் திசம்பர் 13, 14, 15, 16, தேதிகளில் திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாடு மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. குருகுலம் ஓர் அரசியல் இயக்கமாக இல்லாவிட்டாலும், நாட்டில் நடைபெறும் எல்லா அமைப்புகளின் நிகழ்ச்சிகளையும் கூர்ந்து பார்த்து அவற்றின் ஆக்கச் செயல்களுக்கு ஊக்க மூட்டியும் அவ்வவற்றின் சார்பில் நடைபெறக் கூடிய ஆக்கச் செயல்களை அன்போடு சுட்டிக் காட்டியும் தன் கருத்துக்களைத் தெரிவிக்கும் நோக்கமுமுடையது; ஆதலின், தி. மு. கழக நடவடிக்கைகள் பற்றிய கருத்தையும் தெரிவிக்க வேண்டியது நம் கடமையாகின்றது.

தி. மு. கழகம் வெறும் அரசியல் இயக்கமாக இல்லாமல் சீர் திருத்த நோக்கம் கொண்ட ஓர் அறிவியக்கமாகவும் இருக்கிறது. தேர்தலில் கலந்து கொள்ளாததால் அதை அரசியல் இயக்கம் என்பதைவிட ஓர் அறிவியக்கம் என்று கொள்வதே மிகவும் பொருத்தமானதாகும். தன் சீர்திருத்தக் கொள்கைகளாலேதான் அரசியல் துறையில் இந் நாட்டுப் பலதிற மக்களிடத்தும் தான் பெறக்கூடிய ஆதரவைத் தக்கபடி அது பெற முடியாமல் இருக்கிறது. இந் நிலைமையிலிருந்தே, அது, தன் அரசியல் கொள்கைகளைவிடச் சீர்திருத்தக் கொள்கைகளுக்கே முதன்மை கொடுக்கிறது என்று தெரிந்துகொள்ளலாம். தேர்தலில் கலந்து கொள்ளுகிற போதே, அது, ஒரு முழு அரசியலியக்கமாக ஆகும்.

ஆந்திரர்கள் சென்னை பற்றிக் கொண்டாடும் உரிமை, அதற்காக அவர்கள் மற்றொரு 'நவகாளியை' உண்டாக்குவோம் என்றெல்லாம் முழங்கும் போக்கு, கேரளர்கள் நாஞ்சில் நாட்டுத் தமிழர்கள்பால் காட்டும் வேற்றுமை யுணர்ச்சி இவைகளை நோக்க இவர்களோடு இணைந்துநின்று திராவிட நாடு காண முடியும் (அந் நாட்டிலும் மொழிவாரி மாகாணம் அமையத்தானே வேண்டும்) என நம்பமுடியவில்லை.

அரசியல் துறையில் அதன் முதற்பெருங் கொள்கை, திராவிடநாடு தனித்தியங்க வேண்டும் என்பது. அதாவது, தமிழகம், ஆந்திரம், கன்னடம், கேரளம் ஆகிய நான்கு மொழிகள் வழங்கும் பகுதிகள் இந்திய அரசாங்கத்திலிருந்து தமக்குள் ஒரு கூட்டாட்சியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதாகும்.

பிரிவினை என்ற பெயரால் இப்படி ஒரு தனி நாட்டுக்குப் போராடுவதைவிட மத்திய ஆட்சிக்கு அதிகாரங்கள் மிகுதியாக இருக்கக் கூடாது, மொழிவாரி மாகாணங்களை உடனே ஏற்படுத்தி அவற்றிற்கு எல்லா வகையிலும் தனியுரிமை(சுய நிர்ணயம்) கொடுத்து, அவை எல்லாம் தம் கூட்டுப் பொறுப்பில் ஒரு மத்திய ஆட்சியைத், தம் பொதுப் பாதுகாப்பு, போக்குவரவு, அஞ்சல் வசதிகள் முதலியவற்றிற்காக மட்டும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கிளர்ச்சி செய்து வெற்றி பெற்று விட்டால், இப்போதுள்ள சுரண்டல் நிலைக்கோ, மறைமுகமான அடிமைநிலைக்கோ சிறிதும் வழியில்லாமற் போய்விடுமல்லவா? நான்கு பிரிவுகள் அடங்கிய ஒரு நாட்டுக்குப் பதில், 10–12 பிரிவுகளடங்கிய ஒரு நாடு இருக்கும்; அவ்வளவுதானே?

மேலும் திராவிடப் பண்பாடு என்பதும் மேற் சொன்ன நான்கு பகுதிகளோடு நின்றுவிடவில்லையே; மற்ற இந்தியப் பகுதிகளிலும், ஏன், மொழிகளிலும் அது கலந்ததுதானே இருக்கிறது! வேண்டுவது ஒருவரை ஒருவர் சுரண்டல் இல்லாத, தனி நல முயற்சிகளில் இடையீடில்லாத உரிமை நிலைதானே?

இனி, சீர்திருத்தத் துறையில் உருவவழிபாடு பற்றிய கொள்கை தவிர, அது வேண்டும் சாதி ஒழிப்பு, கலப்புமணம், விதவை

மணம், பெண்கள் முன்னேற்றம் முதலிய எல்லாச் சீர் திருத்தங்களையும் இந் நாட்டுச் சைவ வைணவ சமயப் பெரியார்கள் அனைவரும் ஒப்புக் கொள்கிறார்கள். அச் சமயச் சார்பான இந்நாட்டு நூல்களும், முன்னோர்களும் கூட அவற் றுக்கு மாருக இருப்பதாகச் சிறி தும் தெரியவில்லை. ஆகவே, இவ்வியக்கத்தின் கொள்கைகள் இந் நாட்டில் பரவப் பரவ, சமய அமைப்புகள் சீர்திருந்தி உண் மைச் சமயமாக ஓங்குமென்றே தோற்றுகிறது.

சமய எதிர்ப்புபோல் சீர்திருத் தங்களைச் செய்வதைவிட ஒரு சீர்திருத்தச் சமயம் அல்லது சன் மார்க்க சமயத்தின் பேரா லேயே, முன்னோரைப் பின்பற் றியே கூட, அவற்றைச் செய்ய லாம்; செய்தால் அதற்கு இந் நாட்டு மக்களின் விரைந்த ஆத ரவு கட்டாயம் கிடைக்கும்; செய்யும் ஒரு சிலர்க்குக் கிடைத் தும் வருகின்றது.

பொது மக்களின் குழப்ப மற்ற ஆதரவுக்கும் அமைதிக்கும் அத்தகைய போக்கு மிகவும் துணை செய்யும்.

இறுதியாக எந்த இயக்கமும் தன் கொள்கைகள், அமைப்பு முறைகள், விளம்பர (பிரசார) ங் கள், கட்டுப்பாடு முதலியவற்றால் மட்டுமே (கொள்கைகள் பற்றிய நம் கருத்துக்கள் சில மேலே தரப்பட்டுள்ளன, மற்றவை களில் தி. மு. கழகம் நன்னிலை யில் இருப்பது பாராட்டத் தக் கது) வளர்ச்சியடைந்து விடாது; செய்யும் ஆக்க (நிர் மாண) வேலைகளையும் பொறுத்தே அதன் வளர்ச்சி இருக்கும். எனவே, தி. மு. கழ கம் மேலும் சில ஆக்கப் பணி களில் கருத்திருத்துதல் நன்று.

எல்லாச் சீர்கேடுகட்கும், கண்மூடித்தனத்துக்கும் முதற் பெருங் காரணம் இந் நாட்டு மக் களிற் பெரும்பாலோர் எழுத்தறி வற்றவர்களாக இருப்பதே; ஆத லின், தி. மு. க. போன்ற அறி வியக்கங்கள் தமது முதல் ஆக்க வேலையாக முதியோர் கல்வி யைக் கொண்டு, குறிப்பிட்ட அளவு முதியோர்களுக்கு எழுத் தறிவு ஊட்டியவர்களையே தம் ஊழியர்களாகக் கொள்வது என் பதுபோல் சில முறை களையும் வைத்துக் கொண்டால் மிகவும் நலமாக இருக்கும்.

மற்றெல்லாச் செயல்களையும் கண்டனங்களையும் விட இவ்வாக் கப் பணியே நாட்டுமக்களை விரை வில் சீர்திருத்தி முன்னேற்றும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆதலின், தி. மு. கழகமும் மற்ற அறிவியக்கங்களும் முதியோர் கல்வியைத் தமது முதற்பெரும் ஆக்க (நிர்மாண) வேலையாகக் கொண்டால் நாடு உடனடியாக நலம் பெறும். அறிவு முயற்சி கள் வளர்க! அன்புமுறைகள் மிளிர்க! ஆக்கப் பணிகள் சிறக்க!

—ஆடலரசு.

'முல்லைக் கொடி' நேயர்க்கு

5-10-51– லிருந்து 'முல்லைக் கொடி'யின் புதிய ஆண்டு (4-ம் இலை) தொடங்கி நடந்துவருகிறது

சென்ற ஆண்டுக்குக் கை யொப்பம் எந்த மாதம் அனுப்பி யிருந்தாலும், சென்ற ஆண்டு டன் அது முடிவெய்தும். இதழ் கள் சேராமல் குறையிருந்தால் அன்பர்கள் அவற்றைத் தெரி வித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகவே, இந்தப் புதிய ஆண் டுக்குப் புதுக் கையொப்பம் அனுப்பி வைக்க வேண்டும். இதுவரையில் அனுப்பாமலிருக் கும் அன்பர்கள், அன்பு கூர்ந்து, விரைவில் அனுப்பி வைப்பார்க ளாக!

செய்தியாளர்.

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்

கருப்பணமுதலியார்ஸ்டோர்ஸ்
53 கிடங்குதெரு சென்னை 1

குருகுலத்தில் மாணவர் * சொற்பொழிவுகள் *

"நிலவு"

வெள்ளிக் கிழமை அன்று குருகுலப்பள்ளி மாணவர்களின் செயலாளன் "வருங்கால மாணவர்களின் கடமைகள்" என்பதைப் பற்றிப் பேசவேண்டும் என்று தன் தலைமை உபாத்தியாயரிடம் தெரிவித்தான். அவன் சிறுவனாக இருந்ததனாலும், ஆர்வத்துடன் புகன்றதனாலும், அவன் சொல் மீறாது சம்மதித்தார் ஆசிரியர்.

உடனே அன்று மாலை $3\frac{1}{2}$ மணிக்கு "மாணவர் சங்கம்" ஆரம்பிக்கப் பட்டது. பள்ளி ஆசிரியர்களிலேயே ஒரு புதிய உபாத்தியாயரைத் தலைமையாகத் தேர்ந்தெடுத்தார்கள். அவர் தலைமையின் கீழ்ச் சங்கம் ஆரம்பிக்கப் பட்டது. முதலில் இறைவன் வணக்கம்; ஒரே பிள்ளைதான் பாடினான். மிகவும் ஊக்கத்துடன் முன் வந்து பாடினது மிகவும் பாராட்டத் தக்கது. மேலும் அவன் குரல் மென்மை மிகவும் இன்புறத் தக்கதாய் இருந்தது.

இரண்டாவதாக, பள்ளி மாணவர்கள் பேச ஆரம்பித்தார்கள். இளவயது மாணவனாக இருந்தபோதிலும் அவன் கருத்துக்கள் மிகவும் பாராட்டத் தக்கன. 'வருங் காலத்தில் நான் எக்காரியம் செய்யவும் அஞ்சமாட்டேன்; எத் தொண்டாயினும் ஏற்றுச் செய்வேன்; ஏழைகளுக்கு உதவி செய்வதே என் கடமையாகக் கருதி வாழ்வேன். நேர்மையான தொண்டைச் செய்து நீடூழியாக வாழ விழைகின்றேன்' என்று கூறிமுடித்தான்.

அம் மாணவனின் சொற்களைக் கேட்டதும் எனக்கு மிகவும் ஆராய்ச்சி ஏற்பட்டது. இதைப் போல் எல்லா இளம் உள்ளங்களும் ஏற்பட்டால், வயது பக்குவமடையும் போது அவர்கள் கொண்டிருக்கும் கருத்துக்களின் நோக்கமும், பக்குவமடைந்து மற்றவர்களுக்குப் பயன் படுவதில் சிறிதளவேனும் ஐயமில்லை. இப்போது இளமையில் இருப்பவர்கள் வருங்காலத்தில், தலைமைதாங்கிப் பதவி பெரிய அமைப்பாளராக உயரலாம். ஆனால் நோக்கம் நேர்மையான முறையில் உறுதியாக இருந்தால் தான் மற்றவர்கள் பயன் துய்க்க இயலும்.

இதைப் போன்ற நோக்கம் நம்மனோர்க்கு இல்லாதிருந்தமையால் அனேக நாட்களாக ஆங்கிலேயர்களின் அடிமைகளாக இருந்தார்கள். இளம் உள்ளம் உறுதிப்பட்டால் எக்காரியத்தையும் நிறைவேற்ற இயலும். பிறகு ஒருவர் பின் ஒருவராகப் பேச ஆரம்பித்தார்கள். மாணவர்களுக்கு மட்டும், இந் நோக்கம் இருந்தால் போதுமானதன்று; மாணவிகளுக்கும் இந் நோக்கம் அவசியம். இருபாலரும் ஒத்துழைத்தால் இன்பமாகச் செயலாற்றலாம்.

அதனால் வருங்காலத்திலாவது நம் நாடு குறைபாடு இருக்கும் நிலையில் இருந்து வருந்தாமல் சுகமாக வாழ இயலும். மேனாட்டார் செய்யும் எக் காரியங்களிலும் பெண்கள் சம உரிமையாகச் சேர்ந்து தொண்டாற்றுகிறார்கள். எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கிச் செல்வந்தர்களாகத் திகழ்கின்றனர். "பழையன ஒழித்து புதியன புகுத்தும்" புண்ணியர்களாக மிளிர்கின்றனர்.

பெண்களுக்கு எதிலும் உரிமை கொடுக்காத அறியாமை நம் நாட்டை விட்டு விலகினால் தான் நம் நாடு முன்னேறும். அதுவுமன்றித் தொண்டு செய்பவர்களுக்குப் பணம் என்னும் போதாக்குறை நேராதபடி பணக்காரப் பிரமுகர்கள் உதவி செய்தால், தொண்டு சிறப்புற்று விளங்கும். ஆனால், அவர்கள் உதவி செய்ய முன் வருவதில்லை; பணமிருந்தால் மனமில்லை; மனமிருந்தால் பணமில்லை என்ற குறை நம் நாட்டில் அதிகம் இருக்கிறது.

பணம் மிகமிக அறிவு மந்தப் படுகிறது; இதனால் தான் மனம் வருவதில்லை. ஒருவன் தன் மனதில் கருதலாம், நாம் ஒருவன் முயற்சி செய்து செயலாற்ற முடியுமா? என்று தோன்றும். முறையே ஒவ்வொருவரும் இப்படியே நினைத்துச் செய்கையில் முற்படாமல் இருந்தால் எப்படி கருத்துக்கள் நிறைவேறும்? முன் வந்து செய்ய வேண்டும். 1947-ம் ஆண்டுக்கு, முன் நாம் எல்லோரும் முடியாட்சியின் கீழ் அடிமைகளாக இருந்தோம். தற்போது குடியாட்சியின் உதவியால் வாழ்கின்றோம்.

முடியாட்சியில் இருந்தபோது ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் வேண்டும் என்ற எண்ணம் இருந்தது; ஆனால், செய்கையிற் செய்ய எல்லாருக்கும் துணிவு

ஏற்படவில்லை. காந்தி அண்ணல் துணிவுடன் நின்று செயல் புரிந்து வெற்றி பெற்றார். அதன் பயனை நாம் துய்க்கின்றோம்; அவர் அனுபவிக்காமல் இவ்வுலகை விட்டு மறைந்தார். அதைப்போல நம் குருகுலம் இப்போது நடக்கின்றது. இதை முதலில் பலர் நடத்த முன் வந்தார்களா? இல்லை. செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றும்போது அச்சம் என்னும் சூழல் முன்னேற ஒட்டாமல் தடுக்கிறது.

அதை எதிர்த்து நின்று துணிவுடன் நம் "குருகுல தந்தை திரு. இளவழகனார் ஆரம்பித்தார். இதன் வாயிலாக நாம் எல்லோரும் கூடிக் கூட்டத்தில் ஒருவர் கருத்தை மற்றவர் பரிமாறிக் கொள்ள இயல்கின்றது. அது மட்டுமின்றிச் செயல்களும் ஒத்துழைக்க வாயிலாக இருக்கின்றன. ஆண்களுக்கும், பெண்களுக்கும் இவ்விடத்தில் உரிமையுண்டு. எல்லோரும் உழைக்க வாய்ப்புண்டு. இல்லையெனில், நாம் எவ்விதமான தீராத வினையுள் மூழ்கி இருந்தாலும், "முல்லை கொடி" நம் வினையெல்லாம் தீர்த்து வைக்கும் பயனை அடைய முடியுமா?

'ஒவ்வொருவரும் வருங்காலத்தில் செயளாளராகத் திகழ வேண்டும்' என்ற வேண்டுகோளுடன் தலைவர் உரையை முடித்துக் கொண்டார். பிறகு மாலை 5 மணிக்கு மாணவர் சங்கம் கலைந்தது. பிரிய மனமில்லாமல் சங்கத்தை விட்டு எல்லோரும் பிரிந்தோம். இச் சங்கத்தின் கருத்துக்களைக் கேட்டதிலிருந்து குருகுலப் பள்ளி மாணவர்களில் அநேகர் வருங்காலத்தில் செயளாளர்களாகவும், பேச்சாளர்களாகவும் திகழ்வார்கள் என்பதில் ஐயமில்லை!

சேக்கிழார் கண்ட * பெண்மை *

'திரு. இந்திராணி அம்மையார்'—B.O.L. (Hons)

சேக்கிழார் கண்ட பெண்மை இக் கழகத்தினர்பால் திகழ்கின்றது. அதனால் இங்கே அதைப் பற்றிப் பேசுவது அவ்வளவு சிறப்பில்லை.

வங்கக் கவி இந்தியப் பெருமையை உலகுக்கு உணர்த்திய பெரியார். "காதல் காணிக்கை" என்ற நூலில் அவர் ஒரு கவிஞனைக் கற்பனையில் உருவகித்து, 'மற்றொருவனுடைய சோகத்தைப் பற்றிப் பாடாதே; உன் சோகத்தையும் பாடித் தொலைக்காதே; அதனால் பிறர் வருந்துவாரே தவிர வேறில்லை. வாழ்க்கைப் பாதையில் கண்ட உண்மைகளைப் பாடு' என்று ஒரு மானிடன் வேண்டுவதாகப் பாடுகிறார்.

பிறந்தோம் வளர்ந்தோம் என்று கூடச் சொல்ல இயலவில்லை. வளர்க்கப்படுகிறோம், பிறகு இறக்கிறோம். இதுவா வாழ்க்கை. பலர் பல வகையான துன்பங்களை அனுபவிக்கின்றனர். ஆனால் வாழ்வின் இன்பதுன்ப நிகழ்ச்சிகளால் பெற்ற அனுபவத்தினால் கண்ட உண்மைகளே மனித சமூகத்தை வளர்க்கின்றன.

அப்படிப்பட்ட உண்மையைக் கண்ட பெண்களைச் சிந்திப்பதுதான் சேக்கிழார் கண்ட பெண்மை. மதுரைச் சொக்கநாதர் கோவிலில் அடியார் கூட்டம் நுழைகிறது. அவர்களுக்கு முன் ஒரு சிறுவரும் போகிறார். பாடல் கேட்கிறது. ஆலவாய்ச் சுந்தரரைப் பாடுவதாக எண்ண முடியவில்லை. முதலில் "மங்கையர்க்கரசி வளர்கோன் பாவை" என்ற பாடலில் இரண்டு வரிகள் மங்கையர்க்கரசியாரைப் பற்றியே கூறுகின்றன.

ஞானசம்பந்தர் ஆலவாய்க் கடவுளைப் பாடாமல் மங்கையர்க்கரசியை நினைவு கூர்ந்தது எதனால்? அவரால் வணங்கப்பட்டவர் ஆலவாய் ஈசன் என்பதனால்; அந்நாளில் ஆலவாய் ஈசன் கோயில் நிலைபெற்றது அவர் ஒருவரால்தான். பாண்டி நாடு முழுவதும் அப்போது சமண மதத்தில் வீழ்ந்து விட்டது. அரசனும் அவ் வழிப் பட்டான்.

மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ் வழியன்றோ! இந்நிலையை மாற்றியவர், மாற்ற முயன்றவர் மங்கையர்க்கரசியார் ஒருவரே. சைவத்தை இந்நாட்டில் வாழ வைத்த பெருமை மங்கையர்க்கரசியாகிய பெண் ஒருத்திக்கே உரியதாயிருந்தது என்றால், இந்நாட்டில் பெண்கள் முன்னேற்றத்தை ஆண்களும் விரும்பி உதவி செய்கிற இக் காலத்தில், பெண்கள் முயன்றால் என்னதான் முடியாது?

Telegrams: "RAMBROS"
N. Ramu Bros;
GENERAL HARDWARE MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

நாட்டையே திருத்த முற்பட்டாள் ஒரு பெண்; அவளால் முடிந்தது. சேக்கிழார் இதைச் சித்திரித்துப் பெண்மையின் ஆற்றலை விளக்குகிறார். சம்பந்தர் மடத்திற்குத் தீவைப்பு—அரசன் கூறியதைக் கேட்டதும், மங்கையர்க்கரசியார் சமணர்கள் சூழ்ச்சித் திறம் நினைந்து சம்பந்தரைப் பற்றிக் கவலையுறல்—வாதம் என்றால் சம்பந்தர் வல்லவர் என்று மகிழ்தல்—தீ பாண்டியனைச் சென்று பற்றுமாறு சம்பந்தர் பாடல் முதலியன.

திலகவதியார் என்னும் அம்மையார் மருள்நீக்கியார் என்னும் தன் தம்பியைச் சமணமதத்திலிருந்து சைவத்துக்குத் திருப்பிச் சமயாசிரியருள் ஒருவராக்கிய பெருமையுடையவர். மணம் பேசிய கணவர் மாண்டார், பெற்றோர் மாண்டனர்; சமணத்தில் சேர்ந்தார் தம்பி; அதனால் தானும் மாறாமல் சமணம் காக்க தம்பியைச் சைவத்தில் திருப்பவே வாழ்ந்தவர் அவர்; கொள்கைக்காக வாழ்ந்தார்.

இவர் வரலாற்றையும் சிந்தித்திருக்கிறார் சேக்கிழார், இளையான் குடிமாறரின் மனைவியை அவர் சித்திரித்திருக்கும் திறம் ஒவ்வொரு குடும்பத்தாரும் அறிய வேண்டிய ஒன்று. இப்படியே இயற்பகையார் சரித்திரத்தில் மனைவியின் கடமை—ஆணுக்குப் பெண் துணை—வாழ்க்கைத்துணை கொள்கைக்காகவே வாழ்வு—ஆதலின், கொள்கைக்குத் துணை என்பன நிலைநாட்டுகிறார் சேக்கிழார்.

மனைவியின் உரிமை கணவரின் கொள்கையைக் காக்கத் துணையாக இருப்பதிலேதான், இருக்கிறது. என்று இயற்பகையார் மனைவி அறிந்து நடக்கிறார். தனித்த முறையில் பெண் இயங்க நேர்ந்தால், கொள்ள வேண்டிய உறுதியும் பிறவும் "காரைக்கால் அம்மையார் புராணத்தில்" காணலாம்.

மனிதப் பண்பில் பார்த்தால் அவர் வரலாறு உருக்கமும், தெய்வப்பண்பை நோக்கினால் வியப்பும் தரும். அவ் வரலாற்றில் கணவனை மீண்டும் சந்திக்கச் சென்ற காரைக்காலம்மையும் அவர் கணவனும் சந்திக்கும் கட்டம்—கணவன் கைவிட்ட வாழ்வைப் பாழாக்காமல் சிவ கணத்துள் ஒருவராகத் தம்மை ஆக்கிக் கொண்டு உயர்ந்து விட்டார் காரைக்காலம்மையார்.

ஒரு பெண் அறிவும் உறுதியும் ஒழுக்கமும் உடையவளாக இருந்தால் நெறிமாறிய நாட்டையும், தனிப்பட்டவரையும் திருப்ப முடியும்; ஆணுக்குத் தக்க வாழ்க்கைத் துணையாக இருக்கமுடியும்; தனித்தும் உயர முடியும் என்று சேக்கிழார் பெண்மையைக் காண்கிறார்.

பெண்கள் அன்பினும், அறிவினும், அழகினும் சிறந்தவர்களாக இருக்கவேண்டும் என்பது எதற்காக என்றால், தன்னைத் தான் பேணிக் கொள்ள அன்று, தன்னைத் தான் துறப்பதற்காக என்கின்றார். இதற்கு இலக்கியமாக இருக்கிறது சேக்கிழார் புராணம்.

குருகுலத்துக்கு - - - வாழ்த்து

திருவள்ளுவர் உலகப் பெரியார். உலகத்துக்கு ஒருவர் கடவுள் என்பதுபோல் இவரும் ஒருவர். அதனால், இவருக்கும் 'தேவர்' என்று பெயருண்டு. ஆகவே, திருவள்ளுவர் வாக்கு, தேவ வாக்கு.

கடவுள் எல்லார்க்கும் பொதுவானவர். திருவள்ளுவரும் எல்லார்க்கும் பொதுவான வாழ்க்கை வேதம் அருளிச் செய்திருக்கின்றார்.

சாதி மதம் நாடு மொழி நிறம் முதலிய எவ்வகை வேற்றுமையும் கடந்து, எவ்வகைப் பற்றும் இன்றி, எவ்வகைச் சார்புந் தொடராமல், தூய உண்மையளவாக வாழ்க்கையைக் கடைப் பிடிக்க முந்தும் உண்மையாளர்க்குத் திருவள்ளுவர் ஒருவரே உலகுக்கு வழி காட்டி!

உலகத் தலைவர்கள் மனமாரப் பின்பற்றும் பெருங் குரவராய் உயர்ந்து நின்றவர், எல்லாக் காலத்திலும் திருவள்ளுவர் ஒருவரே!

மாம்பாக்கம் குருகுலம் தெய்வத் திருவள்ளுவரின் ஆதீனம்! அதனால், அது, உலகு முழுவதும் இணங்கிப் பணிபுரிந்து நலம் பெறும் சிறப்பு வாய்ந்தது! குருகுலப் பணியாளர் இக்காரணங்களால் உலகப் பணியாளராய் உயர்கின்றனர்.

'மன்பதைப் பணி அலுவலகம்' 'உலகோர் யாத்திரைத் தலம்' 'உலக குருபீடம்' என்பது, குருகுலத்துக்கு நன்கு பொருந்துமபடி, ஆதிகுரு திருவள்ளுவரும் ஆதிபகவனும் அருள் புரிவாராக!

—குருகுலத்தார்

கூட்டு வழிபாட்டுக் குரல்!

சிந்திய கருத்துக்கள்

(பெரிய புராண விரிவுரையில்)

'மயிலை ந. இராமலிங்கம்'

1. இசைபாடுவதற்குப் பாடல்களைத் தேர்ந்தெடுக்கும்போது ஒழுக்கமும் அறச்சிறப்பும் உடைய ஆசியர்களின் வாக்குகளையே தெரிந்தெடுத்துப் பாட வேண்டும்; பாடுவோர்க்கும் அத்தகுதியிருப்பது பின்னும் வரவேற்கத் தக்கது.

2. பாட்டில் மொழி இசை உணர்ச்சி (பக்தி) இம் மூன்றின் சக்தியும் அமைந்திருத்தல் சிறப்பு. இம் மூன்றில் எது குறைந்தாலும் சிறப்பன்று. இறைவன் அருட் பொலிவே இசை.

3. உலகில் இறைவனால் ஆட்கொள்ளப்படாதவரையில் நாம் பேய் போன்ற இகழ்ச்சி நிலையில் இருப்பதாக உணரும் இயல்பு நம்மை உயரச் செய்யும்.

4. நால்வர்க்கு அருளால் இசை அரும்பிற்றே ஒழிய ஆசிரியரின் உதவியால் அன்று; ஆதலின் அருளால் இசை எழுதல் கூடும்.

5. அவ நெறியில் செல்லாமல் தடுத்துத் தவ நெறியில் செலுத்துதலே தடுத்தாட் கொள்ளுதல்.

6. எங்கெங்கே கவர்ச்சி அதிகமோ அங்கே இறைவன் ஆற்றல் அதிகம் என்பது தெளிவு.

7. ஒருவர் தமக்குச் செய்யும் துன்பத்தைத் தாங்கி அதனை அவருக்குத் திருப்பிச் செய்யாதிருத்தல் தவம்; கெட்டவைகளை நீக்கி நல்லவைகளை மேற்கொள்ள உதவியாயிருப்பது தவம்; தவ ஆற்றலால் இடுக்கண்களைக் களையலாம்.

8. சான்றோர் கூடத் துன்பத்தில் வாடுகின்றனரே எனின், அவர்கள் துன்பத்தை வரவேற்று வாடுவார்கள். பிறர்க்காகவும் துன்பத்தை ஏற்பார்கள். காந்தி அடிகள் பிறர் தவற்றுக்குத் தாம் பட்டினி கிடந்து வாடினார். இராமகிருஷ்ணர் பிறர்க்கு உபதேசம் செய்து செய்து தம் தொண்டையைப் புண்ணாக்கிக் கொண்டார். உலகத்தவர் உய்யவும் திருந்தவும் சான்றோர் துன்பத்தில் ஈடுபடுவதற்கும் பின் வாங்க மாட்டார்கள். தவத்தோர் இயல்பு இது.

9. ஒரு தவறு நீக்க இன்னொரு தவறு செய்யாதிருத்தல் நல்லது.

10 பொறுமை மேற்கொள்ளுதல், பட்டினி கிடந்து வாட்டமாயிருத்தல், அதிக போகங் கொள்ளாதிருத்தல் என்பவைகளால் உள்ளம் நல்லவைகளில் உறுதி அடையும்.

கட்டுரையாளர்க்கு

முல்லைக்கொடி குருகுலத்தின் கிளர்ச்சி இதழ். அது நாட்டில் நடைபெறும் அல்லது நடைபெற வேண்டிய ஆக்க வேலைகளிலும், பல துறையிலுமுள்ள சிக்கலான (குழப்ப) நிலைகளிலும் குருகுலத்தார்க்கும் நாட்டவர்க்கும் தெளிவு ஊக்கம் தோன்றுமாறு செய்வதற்கேற்ற வகையில்பெரும்பாலும் செய்திகளின் மேலும், செய்திக்குரிய கருத்துக்களின் மேலுமே செல்லவேண்டும் என்பது ஆசிரியரின் கருத்து. ஆதலின் கட்டுரை எழுதும் அன்பர்கள், மொழி கலை தொழில் அருள் பணி என்னும் ஐவகைத் திறங்களில் மக்கள் உயருமாறு செய்திகளால் ஊக்கும் முறையில் தம் கட்டுரைகளை, அவ் ஐவகைத் திறமைகளுக்கு ஏற்ற தலைப்புகளிலேயே அமைத்து எழுதியனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

———

நஞ்சன்கூடு பல்பொடி.

பாக்டெரியாரின்

[illegible] கன்ஸர்ன்,

54, பந்தர் தெரு, :: சென்னை-1.

மாதர் திருநெறி

(மாதர் திருநெறிக் கழக விழாத் தலைவர் உரை)

முதலாண்டு விழா முதன்மையான விழா. பெருவாரியான மாதர்கள் தமக்கெனக் கழகம் கண்டு வெற்றி பெற நடத்தி வந்திருக்கிறார்கள் என்றால் அது முதன்மையானது தானே. மாதர்களே நடத்தி வந்த கழகத்தில், ஆண்டு விழாவிலேனும் ஆடவர்களுக்கும் இடந் தந்திருக்கிறார்கள், தக்கோர் சொற்பொழிவுகளை நடத்துகிறார்கள் என்றால் அது முதன்மைதானே. திருமுருக கிருபானந்தரை இங்கே அழைத்திருப்பது மாதர்களின் ஆற்றலைக் காட்டுகிறது.

மாதர்கள் இம் மாதிரி தமக்கென ஓர் அமைப்பு கண்டது ஒரு சிறப்பு. உலகில் மாதர்கள் சமபாதி உடையவர்கள். சிவபெருமானின் பாதி உடம்பு பெண்ணுடம்பு என்று சொல்வதுண்டு. அதனால் எல்லாவகையிலும் அவர்கட்குச் சம உரிமை இருக்க வேண்டும். இல்லையேல் நாடும் பிறவும் முன்னேறா. மாதர்கள் தம் முன்னேற்றத்துக்காக இப்படிக் கழகம் கண்டதால் இனி நாடு முன்னேறும். மாது—அழகு; மாதர்—அழகுள்ளவர். அழகு, உடலில் மட்டுமன்று, கல்வியிலும் அருளிலும் அழகுள்ளவர்களாக இருக்க வேண்டும். அருளழகுதான் மிகவும் சிறப்புடையது. மாதர் என்றால் அருளழகு உடையவர்கள் என்று பொருள்.

அருள்—குண நலம். ஆண்கள் அறிவிற் சிறந்தவர்கள். பெண்கள் குணத்திற் சிறந்தவர்கள். மாதர் திருநெறிக் கழகம் என்றது மாதர்க்கு அழகு திருநெறிதான் அதாவது அருள் நெறிதான் என்றபடி. மாதர்க்கு மெல்லியலார்என்றுபெயர்; உடம்பிலும் உள்ளத்திலும் மென்மையுடையவர். மாதர்கள், அழகானவர்கள் மென்மையானவர்கள் என்று உலக வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் சிறப்பிக்கப்பட்டிருத்தலின் அவர்கள் சும்மாயிருந்தால் முடியுமா? அவர்கள் முன்னின்று கல்வியழகு, கலையழகு, அருளழகை வெளிப்படுத்த வேண்டும்; வளர்க்க வேண்டும். மாதர்கள் சமூகத்திலே சிறந்து வர வேண்டும் என்பது குறிக்கோள்; ஆதலின், இக்கழகத்திற்கு இயன்றன செய்யும் எண்ணம் உண்டு. மாதர்கள் புறநெறியை விட அகநெறியை மிகுதியாகப் போற்ற வேண்டும். அக நெறியிலே சிறப்பதோடு அதைப் பரவவும் வைக்கவேண்டும். மங்கையர்க்கரசியார் அகநெறியைத்திருநீற்று நெறியாகப் பரப்பியவர். புறக் காரியங்களிலே சீர்திருத்த அரசியல்களில் ஈடுபடலாம், ஆனால் அக நெறியில் மிகுதியாக ஈடுபட வேண்டும். அவர்களுக்கே உரியது அது. அக நெறியிலே சிறந்து, மாதர்கள், வாழ்க்க வல்லவர்களாக விளங்க வேண்டும்; சிலப்பதிகாரத்தில் கோவலனை மாதர்களே வாழ்த்தியிருக்கின்றனர். காரைக்காலம்மையார் தம் வாழ்வில் அக நெறியிலே சிறந்தவர். அவர்களின் வரலாற்றைப் பின்னால் பேச இருக்கிறார்கள். ஆடவர் சிறப்பு, புறநலச் சிறப்பு; மாதர்களுக்குரியது அக நெறியே; அருள் மயமான நவரசமான திருமுருக. கிருபானந்தர் விரிவுரை நடந்தது. அதற்கு நன்றி செலுத்த வேண்டும். அதை மூன்று வகையில் பகுத்துச் சொல்லலாம்.

'இடர் களையாரேனும்' என்ற பாடலை அவர்கள் நினைவூட்டினார்கள்; அதை ஒட்டியே நன்றி செலுத்தலாம்.

வாரியார் தம் உரையில் உலகியல், அருளியல்களை எல்லாம் அடக்கிச் சொல்லுவர். அரசியல், பொருளியல் சிக்கல்களையும் பேசுவர்.

அரசியல் பொருளியல் இடர் களையாரேனும் இவர்கள் மீது நம் அன்பு அறாது.

மாதர் திருநெறிக் கழகத்திலும் அன்பு அறக் கூடாது.

தனித்த முறையிலே மாதரைச் சிறப்பித்துச் சேக்கிழார் பாடியது காரைக்காலம்மையைத்தான்; அவ்வம்மையார் பாடல் பாடியிருக்கிறார்கள். மற்றவர்கள் பாடவில்லை. ஆகவே அவர்கள் பாடிய திருமுறையின்மீதும் அன்பு அறக்கூடாது. சக்திதிரண்டால் யார் என்ன செய்ய முடியும்? மாதர்கள் தாம் செயலாளர்கள்.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம் மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)